## புதிய திராவிட கழகம் சார்பில் 'வெல்லட்டும் சமூக நீதி' மாநாடு :

# பாசிஸ்ட்டுகள் - அடிமைகளிடம் இருந்து, தமிழ்நாட்டைக் காக்க சாதி - மதம் கடந்து செயலாற்ற வேண்டியது நம் கடமை!

## ஈரோட்டில் நடைபெற்ற 6 வது மாநில மாநாட்டில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!



ஈரோடு,டிச.2–

**ஈரோட்டில் புதிய திராவிட கழகம் சார்பில், நடைபெற்ற 'வெல்லட்டும் சமூக நீதி' மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ''பாசிஸ்ட்டுகள், அடிமைகளிடம் இருந்து, தமிழ்நாட்டைக் காப்பதற்கு நாம் அனைவரும் சாதி – மதங்களைக் கடந்து ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டியது நம் கடமை, காலத்தின் மிக மிக அவசியம். அதற்கு இந்த சமூக நீதி மாநாடு ஒரு சிறந்த அடித்தளமாக அமைய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

புதிய திராவிட கழகம் சார்பில், ஆறாவது வருடமாக நடத்தப்படுகிற, இந்த மாநாடு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த மாநாட்டுக்கு சகோதரர் ராஜ் கவுண்டர் வைத்துள்ள பெயர் 'வெல்லட்டும் சமூக நீதி'. அவர் இந்த மாநாட்டை நடத்துகின்ற இடம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த இந்த ஈரோடு மண். தமிழ்நாட்டுக்கே சுயமரியாதை உணர்வைத் தந்த ஈரோட்டு மண்ணில், புதிய திராவிடக் கழகம் சார்பாக 'வெல்லட்டும் சமூக நீதி என்ற இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்ற வாய்ப்பை எனக்கு அளித்த, ராஜ் கவுண்டர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சகோதரர் பேசும்போது சொன்னார், ''நேற்றிலிருந்து இந்த மாநாட்டு வேலைகள் நடந்து கொண்டிருந்தன, மாநாடு நடக்குமா, மழை வருமா, துணை முதலமைச்சர் கலந்து கொள்வாரா என்ற சந்தேகம் எங்களுக்கு இருந்தது என்று சொன்னார். இன்னும் சொல்லப்போனால், சென்னையில் நேற்று கடும் மழை, இன்றும் சென்னையில் மழை பெய்து கொண்டு இருக்கிறது. நேற்று மாலை அண்ணன் முத்துசாமி, அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களிடமும் தொலைபேசியில் அழைத்துப் பேசினேன். ''நாளை நம் சகோதரர் ராஜ் கவுண்டர் மாநாடு இருக்கிறது, ஈரோடுக்கு வர வேண்டும். நேற்றும், இன்றும் இரண்டு நாள்களுக்கு சென்னையிலிருந்து கிளம்புகிற அனைத்து விமானங்களும் ரத்து, எப்படி வரப்போகிறேன்? அங்கு மழை பெய்கிறதா?" என்று கேட்டேன்.

### சிறப்பான எழுச்சி!

அப்போது செந்தில் பாலாஜி சொன்னார், ''சென்னையில் மழை இருக்கலாம். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மழை இருக்கலாம், ஆனால், நிச்சயமாக எழுமாத்தூரில் மழை இருக்காது. நீங்கள் தைரியமாக கிளம்பி வாருங்கள்" என்று சொன்னார். அவர் சொன்னதுபோல, சகோதரர் ராஜ் கவுண்டர் எண்ணியது போல, இன்றைக்கு இந்த மாநாடு மிகச்சிறப்பாக, எழுச்சியுடன் நடந்துகொண்டு இருக்கிறது. அதற்கு முதலில் இயற்கைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஈரோட்டு மண்ணில் தந்தை பெரியார் நடத்திய குடியரசுப் பத்திரிகையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் பணியாற்றினார்கள். பணியாற்றினார்கள் என்று சொல்வதை விட இங்கேதான் பயிற்சி பெற்றார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அந்த மண்தான் இந்த ஈரோடு மாவட்ட மண். தந்தை பெரியாரின் ஈரோட்டு குருகுலத்தில், அவர்கள் பெற்ற அந்த பயிற்சியால்தான், ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்துக்கும் அறிவு வெளிச்சம் பிறந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஈரோட்டு மண்ணில் இந்த மாநாட்டை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, சகோதரர் கே.எஸ்.ராஜ் கவுண்டர் அவர்களுக்கு என் வாழ்த்துகள், பாராட்டுகள்.

இந்த மாநாட்டை நடத்த சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்கள் எடுத்த முயற்சிகளைப் பற்றி கேள்விப்பட்டேன். மாநாடு அறிவித்துவிட்டோம், விளம்பரப் படுத்திவிட்டோம், நிச்சயம் எல்லாரும் வந்துவிடுவார்கள் என்று அவர் விட்டுவிடவில்லை. அவரே ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று, மக்களைச் சந்தித்து, கல்யாணப் பத்திரிகை கொடுக்கிற மாதிரி மாநாட்டு அழைப்பிதழைக் கொடுத்திருக்கிறார். கிட்டத்தட்ட ஒரு திருமணத்தைப் போன்று சகோதரர் இந்த நிகழ்ச்சியை நடத்தியுள்ளார்.

அவர் வரவேற்புரை ஆற்றினார். பேசும்போது குறிப்பிட்டு சொன்னார். ''நீங்கள் ஒவ்வொருவரும் பல மாவட்டங்களில் இருந்து வந்திருக்கிறீர்கள். நிகழ்ச்சி முடிந்து நீங்கள் ஒவ்வொருவரும் பத்திரமாக, பாதுகாப்பாக வீடு திரும்ப வேண்டும்" என்று உரிமையுடன் சொன்னார். இதுதான் ஒரு தலைவனுக்கு அழகு. அந்த விதத்தில் சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்களுக்கு நான் தலைவணங்குகிறேன். கடந்த 3 மாதங்களாக இந்த மாநாட்டுக்காக அவர் உழைத்திருக்கிறார். சகோதரர் ராஜ் அவர்களும், புதிய திராவிடக் கழக நிர்வாகிகளும் உழைத்த உழைப்பிற்கு கிடைத்த வெற்றிதான் இங்கே கூடியிருக்கிற மக்கள் கூட்டம்.

### மாநாட்டின் வெற்றி!

இந்த மாநாட்டுக்கு எல்லா தரப்பு மக்களையும் ஒரே வித அன்போடு சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்கள் அழைத்துள்ளார்கள். அதுதான் இந்த மாநாட்டின் வெற்றி. அவர் சொல்ல வருகிறார், எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். எல்லோரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்ற அவருடைய நோக்கத்தை நாம் பாராட்டியாக வேண்டும்.

நம் கழகத்தின் கூட்டங்களில் பேசும்போது என்னை 'சின்னவர்' என்று அழைப்பார்கள். அந்தப் பெயருக்குப் பழக்கப்பட்டவன் நான். ஆனால், இந்த மேடை எனக்குக் கொஞ்சம் புதிதாக இருந்தது. ராஜ் கவுண்டர் அவர்கள் என்னைப் பற்றி பேசும்போது, ''சென்னையிலிருந்து துணை முதலமைச்சர் அண்ணன் வந்திருக்கிறார்" என்ற பாசத்துடன் அழைத்தார். இதில் ஒரு விஷயத்தை நான் உணர்ந்துள்ளேன்.

மிக இளம் வயதிலேயே ஒரு இயக்கத்தை வழிநடத்தக்கூடிய சிறப்பு, பெருமை சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்களுக்கு கிடைத்துள்ளது. ஓர் இயக்கத்தில் உறுப்பினராக இருப்பது சுலபம். ஆனால், அதை வழிநடத்துவது என்பது அவ்வளவு சாதாரணம் அல்ல. அது மிகப்பெரிய ஒரு சவால். அந்த சவாலைத் திறம்படச் செய்து, இங்கு உங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிறார், உங்களின் சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்கள்.

### இன்னொரு கூடுதல் பெருமை!

இளைஞராக இன்றைக்கு இந்த அரசியல் இயக்கத்தை மிகச்சிறப்பாக செய்துகொண்டிருக்கிறார். அவர் இளைஞராக மட்டும் வரவில்லை. இன்னொரு கூடுதல் பெருமை என்னவென்றால், எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியில் பயிற்சி எடுத்துக் கொண்டவர்தான் ராஜ் கவுண்டர் அவர்கள். 2010-ஆம் ஆண்டு முதல் 2013-ஆம் ஆண்டு வரை கழக இளைஞர் அணியின் கொடுமுடி ஒன்றிய துணை அமைப்பாளராக் கழகப் பணியாற்றிவர் சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்கள்.

இன்றைக்கும் அவரது அண்ணன் சதீஷ்குமார், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக சிறப்பாகப் பணியாற்றுகிறார். அண்ணன், தம்பி மட்டும் கிடையாது. அவரது குடும்பமே தி.மு.க. குடும்பம். அவர் தந்தையார் இப்போது என்னை மேடையில் வந்து வாழ்த்தினார், அவர் தந்தையார் சதாசிவம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர் அணியில் கழகப் பணி ஆற்றியவர். ஆகவே, இந்த மேடைக்கும், இந்த இயக்கத்துக்கும் நான் புதியவன் அல்ல. நாம் அனைவரும் கிட்டத்தட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். எங்கள் குடும்ப விழாவில் கலந்து கொள்ளும் உணர்வோடுதான் நான் இங்கே வந்துள்ளேன். அவரும் இதே உணர்வோடன் தான், தன்னுடைய இயக்கத்துக்கு 'திராவிடம்' என்கிற பெயரைத் தைரியமாக வைத்துள்ளார். அதற்கு எனது பாராட்டுகள், வாழ்த்துகள். ஏனென்றால், திராவிடம் என்று இந்தக் காலத்தில் பெயர் வைப்பது, அவ்வளவு சுலபம் கிடையாது. திராவிடம் என்ற பெயரைக் கேட்டாலே டெல்லியில் இருந்து மிரட்டல் வரும். இங்கு இருக்கின்ற லோக்கல் சங்கிகள் எல்லாம் ஏதாவது அவதூறுகள், வன்மங்களைத் தொடர்ந்து பரப்புவார்கள்.

### இனத்தால் திராவிடர்கள்!

இதற்கெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அப்போதே சுருக்கமாகப் பதில் சொல்லிட்டார்கள். ''நாம் மொழியால் தமிழர்கள், இனத்தால் திராவிடர்கள், நாட்டினால் இந்தியர்கள்" என்று கலைஞர் சொன்னார்கள். அதைவிட இன்னும் பெருமையாக நம் இனமானப் பேராசிரியர் அவர்கள் அவருக்கே உரிய பாணியில் சொன்னார். ''வெறும் மொழி உணர்ச்சி மட்டும் இருந்தால், அவன் தமிழன். அந்த மொழி உணர்ச்சியோடு சேர்த்து மான உணர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் இருந்தால் அவன் திராவிடன்" என்றுச் சொன்னார்.

திராவிடன் என்கிற சொல்லை, தந்தை பெரியாரோ, பேரறிஞர் அண்ணாவோ, டாக்டர் கலைஞர் அவர்களோ முதன்முதலாகப் பயன்படுத்தவில்லை. நாம் கண்டுபிடித்த வார்த்தை கிடையாது. 1856-ஆம் ஆண்டு கால்டுவெல் அவர்கள், தென்னிந்திய மொழிகளை ஆய்வு செய்து, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுதினார். அதில், ஆரியர் - திராவிடர் என்பதெல்லாம் இனத்தைக் குறிக்கும் பெயர்கள் என்று குறிப்பிட்டார். இவ்வளவு தெளிவான வரலாறும் ஆய்வுகளும் இருந்தும், வேண்டுமென்றே சங்கிகள் இன்றைக்கு 'திராவிடம்' என்ற வார்த்தைக்குப் பல களங்கங்களைக் கற்பிக்கிறார்கள். குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள்.

முன்பெல்லாம் இங்கே இருக்கிற சங்கிகள் மட்டும்தான் இதைச் செய்துகொண்டு இருந்தார்கள். இப்போது, அவங்களுடன் சேர்ந்து, ஆளுநரும் அந்த வேலையில் இறங்கியுள்ளார். ஆளுநர் ஆர்.என்.ரவி, சென்ற வாரம் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, திராவிடம் என்ற வார்த்தை ஒரு கற்பனையான வார்த்தை என்று பேசியிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு திராவிடம் என்பது காலாவதியான கொள்கை என்று சொன்னார். அதனால்தான், 4 நாட்களுக்கு முன்பு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இதே ஈரோட்டில் பேசும்போது, ''ஆளுநரின் திமிரை நாங்கள் அடக்குவோம்" என்று சொன்னார். தி.மு.க-வின் தலைவர் நாங்கள் என்று சொன்னது, திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் அவர் சொல்லவில்லை. புதிய திராவிடக் கழகம் போன்ற தோழமைக் கட்சிகளையும் சேர்த்துதான் அவர் சொன்னார்.

இதேமாதிரி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே ஆளுநர் அவர்கள் திராவிடத்தை விமர்சித்துப் பேசினார். அப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி என்ன சொன்னார் தெரியுமா? பத்திரிகையாளர்கள் ''இப்படி பேசிவிட்டார். திராவிடம் என்ற வார்த்தையைக் கொச்சைப்படுத்திப் பேசுகிறார். உங்களின் பதில் என்ன?" என்று கேட்கும்போது, எடப்பாடி பழனிசாமி அவர்கள் உடனே, ''இதையெல்லாம் நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது, பெரிய அறிஞர்களிடம்தான் கேட்க வேண்டும், திராவிடம் பற்றியெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது" என்று சொன்னவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

தன் கட்சியின் பெயரில், திராவிடம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, அதையே விட்டுக் கொடுத்தவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள். திராவிடத்தை மட்டும் அவர் மறக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர் அண்ணா யார், எம்.ஜி.ஆர் யார் என்பதைக்கூட மறந்துவிட்டார். இப்போதைக்கு அவர் மனதில் முழுதும் நிறைந்திருப்பது அண்ணாவோ, எம்.ஜி.ஆரோ, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரோ கிடையாது. அவர் மனதில் முழுவதுமாய் நிறைந்திருப்பது அமித்ஷா மட்டும்தான்.

நாம் யார் கூடவாவது போட்டி போட வேண்டும் என்றால் என்ன செய்வோம்? ''நான் பெரிய ஆளா, நீ பெரிய ஆளா" என்று மோதி பாத்திடலாம் என்று சவால் விடுவோம். இல்லை, "நான் அறிவாளியா, நீ அறிவாளியா" என்று பார்க்கலாம் என்று சவால் விடுவோம். ஆனால், அ.தி.மு.க-வில் என்ன போட்டி நடக்கிறது? அமித்ஷாவுக்கு நீ சிறந்த அடிமையா, நான் சிறந்த அடிமையா என்ற போட்டி அவர்களுக்கு இன்று நடந்து கொண்டு இருக்கிறது. 'நான் தான் சிறந்த அடிமை' என்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் 8 அடி பாய்ந்தால், அங்கு இருக்கும் இன்னும் சிலர், 'இல்லை உன்னைவிட நான் மிகச் சிறந்த அடிமை' என்று 16 அடி பாய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

### அமித்ஷா வீடுதான் தலைமையகம்!

சங்கிகளுக்கு ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். வங்கிகளை எடுத்துக்கொண்டால் அதில் நிறைய கிளைகள் இருக்கும். ஈரோட்டில் ஒரு கிளை, சேலத்தில் ஒரு கிளை இருக்கும். ஆனால், தலைமை அலுவலகம் டெல்லியில் இருக்கும். அந்த தலைமையகம் தான் அனைத்து கிளைகளையும் கட்டுப்படுத்தும். அந்த மாதிரிதான், தமிழ்நாட்டில், அ.தி.மு.க உட்பட பல கட்சிகளுக்கு டெல்லியில் இருக்கின்ற அமித்ஷா வீடுதான் தலைமை அலுவலகமாகத் திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு, எடப்பாடி பழனிசாமி அவர்கள் பல கார்கள் மாறிப் போய் அமித்ஷாவைப் பார்த்துவிட்டு வந்தார். அதே மாதிரி, இந்தப் பகுதியைச் சேர்ந்த மூத்த முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் அவர்கள், ''ஹரித்வார் போகிறேன், ஆன்மீகப்பாதையில் செல்கிறேன்" என்று சொல்லிட்டுப் அவரும் அமித்ஷாவைப் பார்த்துவிட்டு வந்தார். பார்த்துவிட்டு வந்து, அவரின் ஆலோசனைப்படி இன்றைக்கு இன்னொரு கட்சியில் சென்று சேர்ந்துவிட்டார். அ.தி.மு.க-வில் இருக்கின்ற மூத்த முன்னாள் அமைச்சர்கள் கூட இன்றைக்கு எந்தக் கட்சியில் சேர வேண்டும் என்று, பி.ஜே.பி-யிடம் ஒப்புதல் வாங்கித்தான் சேர்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது பா.ஜ.க. இவையெல்லாம் நாம் நினைப்பதுபோல் கட்சி மாற்றம் கிடையாது. கிளை மாற்றம் அவ்வளவுதான்.

இன்றைக்கு யார் வேண்டுமானாலும், எத்தனை கிளைகள் வேண்டுமானாலும், மாறட்டும் அல்லது தாவட்டும். இதற்கு இந்த மேற்கு மண்டலத்தின் 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றி, யார் வந்தாலும் மேற்கு மண்டலத்தில் தி.மு.க, நம் கூட்டணியின் வெற்றியை, யாராலும் தடுக்க முடியாது என்பதை, இன்று வந்துள்ள இந்த கூட்டத்தின் எழுச்சி சுட்டிக் காட்டுகிறது. அந்த வெற்றிக்கு இந்த மாநாடு நிச்சயம் அடித்தளம் அமைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, எல்லோரையும் அரவணைத்துச் செல்கிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசை நடத்தி வருகிறார். இதை பொறுத்துக்கொள்ள முடியாத பாசிச பா.ஜ.க அரசு ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகச் செயல்பட்டுட்டு வருகிறது.

### தேர்தல் ஆணையம்!

திராவிட இயக்கத்தின் போராட்டத்தால், கழக அரசின் திட்டங்களால் முன்னேறி வந்துகொண்டு இருக்கிற பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சிறுபான்மையினர் மக்களை பா.ஜ.க மீண்டும் பின்னோக்கி இழுத்துச் செல்கிறது. அதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணம். தேர்தல் ஆணையம் மூலமாக ஒன்றிய பா.ஜ.க அரசு கொண்டு வருகிற எஸ்.ஐ.ஆர். திட்டம். தி.மு.க-வுக்கு ஆதரவாக இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் மக்களின் வாக்குரிமையைப் பறிக்கப் பார்க்கிறார்கள். இன்றைக்கு அவர்களின் வாக்குகளுக்கும் தி.மு.க தான் களத்தில் நின்று காப்பாற்றிக்கொண்டு இருக்கிறது. தி.மு.க காப்பாற்றுகிறது என்றால், ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசுக்கு அ.தி.மு.க துணை போகிறது. இப்படிப்பட்ட அரசியல் சூழ்நிலையில்தான், "வெல்லட்டும் சமூகநீதி" என்கிற தலைப்பில் ஒரு கொள்கைப்பூர்வமான மாநாட்டை இங்கே நீங்கள் நடத்தி காட்டியிருக்கிறீர்கள்.

இங்கே நான் முக்கியமாக ஒரு விஷயத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னாலே அது சமூகநீதி இயக்கம்தான். தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான இடஒதுக்கீட்டை உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழகம். இஸ்லாமியர்களுக்கும், அருந்ததியினர்களுக்கும் உள் ஒதுக்கீடு கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர் ஆட்சிதான். அ.தி.மு.க ஆட்சியில் இடஒதுக்கீட்டை ரத்து செய்ய வருமான வரம்பை கொண்டு வந்தபோது, அதை போராடி ரத்து செய்ய வைத்தது திராவிட முன்னேற்றக் கழகம். இப்படி தி.மு.க.வின் சமூகநீதி வரலாற்றை பற்றி நிறைய சொல்லலாம். அனைத்து சமூக மக்களுக்கும் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம், நம் தலைவர் அவர்கள் என்றைக்கும் உறுதியோடு நிற்பார்.

### திருவுருவச்சிலை!

இன்றைக்கு இந்த மேடையில், இந்தப் பகுதியில் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வீரர்களுக்கு மரியாதை செலுத்தினோம். இங்கே நாம் விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு மரியாதை செய்துள்ளோம். தீரன் சின்னமலை அவர்களுக்கு சென்னை கிண்டியில் சிலை அமைத்து, அவரின் பிறந்த தினத்தை அரசு விழாவாக அறிவித்தவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தற்போது நம் முதலமைச்சர் அவர்கள், ஓடாநிலையில் தீரன் சின்னமலைக்குத் திருவுருவச் சிலை அமைக்க சமீபத்தில் அடிக்கல் நாட்டியுள்ளார்கள்.

அதேபோல, அவருக்கு உற்றத்துணையாக இருந்த பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்துக்கும் மரியாதை செய்திருக்கிறோம். தீரன் சின்னமலையின் தளபதியாக நின்று ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியவர்தான் பொல்லான் அவர்கள். பொல்லான் அவர்களுக்குத் திருவுருவச்சிலை அமைக்க வேண்டும் என்பது பல வருடங்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்படி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பொல்லான் அவர்களுக்குச் சிலையும், மணிமண்டபமும் திறந்து வைத்துள்ளார்கள்.

கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி அவர்களுக்கு மரியாதை செய்துள்ளோம். வல்வில் ஓரி அவர்களின் பிறந்த நாளை, அரசு விழாவாக நடத்த உத்தரவிட்டவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்படும் திருப்பூர் குமரன் அவர்கள் பிறந்த சென்னிமலையில் அவருக்கு மணிமண்டபம் அமைக்க, நம் முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் அடிக்கல் நாட்டியுள்ளார்கள். குணாளன் நாடார் அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்றவர். அவருக்கும் இங்கு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. அவருக்கு, மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். பல முக்கியமான கோரிக்கைகளை சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்கள் இங்கு வைத்துள்ளார்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்கு நிச்சயம் அவற்றை எடுத்துச் செல்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு எதை எப்படி, எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்ற வித்தை அவருக்குத் தெரியும்.

உங்கள் கோரிக்கைகளை நிஜமாக்குகின்ற பணிகளில் நிச்சயம் எனது முழுகவனத்தையும் ஈடுபடுத்துவேன் என்பதை இங்கு கூறிக் கொள்கிறேன்.

நான் இங்கே குறிப்பிட்ட அத்தனை வீரர்களும், தியாகிகளும், ஒற்றுமையுடன் இருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள்.

இந்த நேரத்தில் பாசிஸ்ட்டுகள், அடிமைகளிடம் இருந்து, தமிழ்நாட்டைக் காப்பதற்கு நாம் அனைவரும் சாதி - மதங்களைக் கடந்து ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டியது நம் கடமை, காலத்தின் மிக மிக அவசியம். அதற்கு இந்த சமூக நீதி மாநாடு ஒரு சிறந்த அடித்தளமாக அமைய வேண்டும்.

### எண்ணற்ற திட்டங்கள்!

கடந்த நான்கரை ஆண்டுகளில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு எண்ணற்ற திட்டங்களை சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது.

நம்முடைய அரசாக இருக்கட்டும், தி.மு. கழகமாக இருக்கட்டும், உங்கள் அனைவரின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து உழைப்போம் என்ற உறுதிமொழியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, மற்றவர்கள் செய்கிற அவதூறுகளை எல்லாம் புறந்தள்ளி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நீங்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

2026-இல், 200 தொகுதிக்கு மேல் கண்டிப்பாக தி.மு.க கூட்டணி நிச்சயம் வென்று காட்ட வேண்டும். அதற்காக இப்போதே நம்முடைய உழைப்பை இதே எழுச்சியுடன், உறுதியோடு செலுத்த வேண்டும் என்று உங்களையெல்லாம் உரிமையோடு கேட்டு, இந்தச் சிறப்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை அளித்த அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அண்ணன் முத்துசாமி அவர்களுக்கு, இங்கு மாநாட்டுக்கு எனக்கு அழைப்பு விடுத்து, நான் கலந்து கொள்வதற்கு மிக மிக முக்கியமாகக் காரணமாக இருந்த சகோதரர் ராஜ் கவுண்டர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து, சமூகநீதி வெல்லட்டும் - சமத்துவம் தழைக்கட்டும்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர் முத்துசாமி, மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கே.எஸ்.மூர்த்தி, தோப்பு வெங்கடாசலம், நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், புதிய திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கே.எஸ்.ராஜ் கவுண்டர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் கல்லிப்பட்டி மணி, சச்சிதானந்தம், வீரமணி, கீதா நடராஜன், புதிய திராவிடக் கழகத்தின் நிர்வாகிகள் கணேசன், ராஜேஷ் கவுண்டர், செளந்தர்ராஜ், சர்மா, இம்மானுவேல், கொங்கு சந்துரு, ராமச்சந்திரமூர்த்தி, பிரசாத், தினகரன், டைடானிக் தர்மா, குமார், ஜெகதீசன், அருணாச்சலம், சரவணன், ஜெகதீஷ், முத்தரசு சேகர், பெரியசாமி, சந்தோஷ், செந்தில், விஜய், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் குணசேகரன், கதிர்வேல், விஜயகுமார், நடராஜன், சிவக்குமார், முத்துக்குமார், ஈரோடு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ரகு, சதீஷ்குமார், நிதின், விஜயராகவன், சன் சுரேஷ்குமார், ஒன்றிய அமைப்பாளர் மதன் குமார் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.